# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No. 2/2015

DW1–ஜீனா நாள் –24.02.2025

**3ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நிறைய படித்திருக்கிறேன். மாசுகட்டுப்பாட்டு வாரியத்தில் முதல்நிலை விஞ்ஞானியாக இருந்தேன் அதன் பிறகு மேலாளராக பணிபுரிந்தேன். இந்த வழக்கின் சங்கதிகள் நன்கு தெரியும். என் வழக்கறிஞரிடம் நான் தான் வழக்கின் விவரங்கள் சொன்னேன். என் அப்பாவின் தகப்பனார் பெயர் பழமலை. அவருக்கு இரண்டுமனைவிகள். ஒருவரின் பெயர் புயவரத்தாள், இரண்டாவது மனைவியின் பெயர் புரவாய். பழமலைக்கு முதல் மனைவியின் மூலமாக மூன்று மகன்கள், ஒரு மகள். இரண்டாவது மனைவியின் மூலமாக இரண்டு மகன்கள், ஒரு மகள். முதல் மனைவியின் மகன்கள் பெயர் முத்துசாமி, வடிவேல், ராமசாமி, மகள் பெயர் உண்ணாமலை. இரண்டாவது மனைவியின் மகன் பெயர் முத்தையன், சண்முகம், மகள் பெயர் பழனியம்மாள். வடிவேலின் பிள்ளைகளின் பெயர் ஜோதி, மணிமேகலை, நான், சந்திரபோஸ், பாலமுருகன்(இறந்துவிட்டார்), ராமகிருஷ்ணன், வெங்கடேசன் ஆகியோர் வாரிசுகள். நான் இந்து முறைப்படி 1997ல் திருமணம் செய்தேன். திருப்பதியில் வைத்து திருமணம் நடந்தது. என் பெற்றோர் முன்னிலையில் தான் திருமணம் நடந்தது. என் கணவர் ரெட்டியார் குடும்பத்தை சேர்ந்தவர். நான் பட்டியலினத்தை சேர்ந்தவர். நாங்கள் சட்டப்படியான திருமணம் செய்துக்கொண்டோம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்று ஞாபகமில்லை. நான் தனியாக பாக வழக்கு போட்டுள்ளேன். அந்த பாக வழக்கில் என்னுடன் பிறந்த எல்லா சகோதர, சகோதரிகளையும் சேர்க்கவில்லை. என் கணவருக்கு நான் இரண்டாவது மனைவி. என் சித்தியின் பெயர் டாக்டர் சண்முகபிரியா. டாக்டர் சண்முகபிரியாவிற்கும் எனக்கும்

எந்தவிதமான மனவருத்தமும் இல்லை. அவர் என்னுடன் தான் முதலில் இருந்தார். அவருக்கு மனநிலை பாதிக்கப்பட்டதால் அவரை மருத்துவமனையில் சேர்த்தார்கள் அவர் அங்கேயே இறந்துவிட்டார். அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. அவரிடமிருந்து நான் கார், நகை மற்றும் சொத்துக்களை வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. சண்முகபிரியா என்பெயரிலும், என் கணவர் பெயரிலும் புகார் கொடுத்தார். ஆனால் அதை பின்னிட்டு வாபஸ் வாங்கி கொண்டார். எனது சகோதரர் பாலமுருகன் வழக்கறிஞர் தான்.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.